வகுப் – 01 + 1414 S. Anuresy

# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| தரம் : 09 | புவியியல்<br>பெயர் / சுட்டெண் : ...................................................... | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. ஆசியாவில் நடைபெறும் புராதன விவசாய முறையாகக் கருதப்படுவது.
    1) நுகர்வு பயிர்செய்கை  2) பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை
    3) வர்த்தகப் பயிர்ச் செய்கை  4) விலங்கு வேளாண்மை

02. நாடோடி விலங்கு வேளாண்மை இடம் பெறும் ஆசியாவின் புல்வெளி.
    1) வெல்ட்  2) ஸ்ரெப்பீஸ்  3) பிரேயரீஸ்  4) பம்பாஸ்

03. ஆசிய வலய நாடுகளில் கைத்தொழில் விருத்தி அடைந்தமைக்கான சான்றாகத் திகழ்வது.
    1) சேவைத் தொழில் விருத்தி  2) அதிகரித்த தொழிலாளர்
    3) அதிகரித்த சனத்தொகை  4) முதலீட்டுத் திட்டங்கள்

04. ஓர் ஆண்டில் பெரும் பகுதி பனியால் மூடப்பட்டிருக்கும் பிரதேசம்.
    1) அயன வலயம்  2) இடைவெப்ப வலயம்  3) ஈரவலயம்  4) குளிர்வலயம்

05. திறந்த பொருளாதார வர்த்தகக் கொள்கையால் பெருமளவு சுதந்திர வர்த்தக வலயங்களை ஆரம்பித்துள்ள ஆசிய நாடுகளாவன.
    1) இலங்கை, பாகிஸ்தான்  2) இந்தியா, சீனா
    3) தென் கொரியா, ஆப்கானிஸ்தான்  4) வங்காள தேசம், சிங்கப்பூர்

06. இந்தியாவில் காணப்படும் சிறப்புக் கைத்தொழில் வலயம்.
    1) மும்பை  2) பெங்களூர்  3) தாமோதார்  4) நாக்பூர்

07. உலகின் குடியடர்த்தி மிக்க ஆசிய வலயம்.
    1) வடமேல் ஐரோப்பா  2) தென்னாசியா
    3) தென்கிழக்காசியா  4) வடகீழ் ஐக்கிய அமெரிக்கா

08. தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு.
    1) சார்க்  2) எபெக்  3) ஓபெக்  4) ஆசியான்

09. பதுளை, மொனராகலை மாவட்டங்கள் உள்ளடக்கிய பிரதேசம்.
    1) கொழும்பு பெருநகர பிரதேசங்கள்  2) தெற்குப் பிரதேசம்
    3) ஊவாப் பிரதேசம்  4) கிழக்குப் பிரதேசம்

10. மேம்பாலங்கள், சுரங்கப்பாதை, நடைபாதை போன்றன அதிகளவில் அமைக்கப்பட்டுள்ள நிர்வாகப் பிரிவு.
    1) கொழும்புப் பெருநகரம்  2) திருகோணமலை நகரம்
    3) அம்பாந்தோட்டை நகரம்  4) அனுராதபுர நகரம்



kalvi.lk

11. துரித மகாவலி அபிவிருத்தி செயல் திட்டத்தில் உள்ளடங்கும் நீர்த்தேக்கம்.
1) உடவளவை 2) மொறக்காகந்த 3) இங்கினியாகல 4) ரன்தெனிகல

12. இயற்கைத் தாவரமான பனை மரம் அதிகளவில் வளரும் பிரதேசம்.
1) வடமேல் மாகாணம் 2) கிழக்கு மாகாணம்
3) வட மாகாணம் 4) வடமத்தியமாகாணம்

13. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தீவாக விளங்குவது.
1) மன்னார் 2) வேலணை 3) சின்னபாசு 4) பெரியபாசு

14. வட பகுதியில் அமைந்துள்ள பறவைகள் சரணாலயம்.
1) யால 2) குமண 3) சுண்டிக்குளம் 4) வில்பத்து

15. ஊவா பிரதேசத்தை " வெல்லஸ்ஸ" என்ற சிறப்பு பெயர் கொண்டு அழைக்கக் காரணமாக அமைந்தது.
1) விவசாயத்துறை 2) கைத்தொழில்துறை
3) சுற்றுலாத்துறை 4) பெருந்தோட்டத்துறை

16. மொனராகலை மாவட்டம் பெருமளவில் எதிர்கொள்ளும் இயற்கை அனர்த்தம்
1) வரட்சி 2) வெள்ளப் பெருக்கு 3) இடி மின்னல் 4) சுனாமி

17. இலங்கையை முழுவதும் உள்ளடக்கி வரையப்பட்ட தேசப் படங்களின் எண்ணிக்கை (1:50,000)
1) 25 2) 09 3) 92 4) 80

18. தேசப்படங்களில் நட்சத்திரக் குறியீட்டினால் காட்டப்பட்டிருக்கும் வடக்கு.
1) காந்த வடக்கு 2) உண்மை வடக்கு 3) அளியடைப்பு வடக்கு 4) நேர்வடக்கு

19. இலங்கையின் தென் பகுதியில் அமைந்துள்ள குடாவும், முனையும்.
1) கொட்டியாரக் குடா, பவுல்முனை 2) அறுகம்குடா, தெய்வேந்திரமுனை
3) வெலிகம் குடா, தெய்வேந்திரமுனை 4) பாசிக்குடா, சங்கமன்காந்தமுனை

20. உயர்நிலைப் பகுதியில் அமைந்துள்ள சமவெளி.
1) நீர்பிரி நிலம் 2) மேட்டு நிலம் 3) பள்ளத்தாக்கு 4) கணவாய்



kalvi.lk

## பகுதி - II

**1 ஆம், 2 ஆம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

01. 1) ஆசியாப் படத்தில் 1-12 வரையான இலக்கங்கள் குறித்து நிற்கும் பௌதிக அம்சங்களைப் பெயரிடுக.
**இமயமலை, வங்காள விரிகுடா, ஒப்நதி, இலங்கை, செங்கடல், அரேபிய குடாநாடு, ஆட்டிக் சமுத்திரம், போர்னியோ தீவு, கஸ்பியன் கடல், பசுபிக் சமுத்திரம், யூரல் மலை**

(12 புள்ளிகள்)

02. 2ம் தவணையில் நீங்கள் மேற்கொண்ட கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை அளிக்க.
1) 2 ஆம் தவணையில் நீர் புவியியல் பாடத்திற்காக மேற்கொண்ட கணிப்பீட்டு வகைகள் 2 ஐத் தருக?
2) கணிப்பீட்டிற்காக ஆசிரியரால் வழங்கப்பட்ட 2 ஆலோசனைகளைக் குறிப்பிடுக?
3) கணிப்பீட்டிற்காக நீர் தகவலைப் பெற்றுக்கொண்ட மூலங்கள் 3 குறிப்பிடுக?
4) கணிப்பீட்டுக்காக உமக்குத் தரப்பட்ட தர உள்ளீட்டு பொருட்கள் 3 குறிப்பிடுக?
5) கணிப்பீட்டின் மூலம் நீர் பெற்றுக்கொண்ட பயன்கள் 2 தருக?

03. 1) ஆசியாவின் பிரதான கைத்தொழில் வகைகள் 3 குறிப்பிடுக?
2) 1980 பின் கைத்தொழில் சிறந்து விளங்கும் ஆசிய நாடுகள் 3 குறிப்பிடுக?
3) ஆசிய நாடுகள் எதிர்கொள்ளும் பௌதிக சவால்கள் 3 குறிப்பிடுக?
4) முதியோர் தொகை அதிகரிப்பதால் ஒரு நாடு எதிர்கொள்ளும் 3 சவால்களைத் தருக?

04. 1) பின்வரும் நாடுகளின் கூட்டமைப்பின் பெயர்களைக் குறிப்பிடுக?
(a) தென் கிழக்காசியா.
(b) தென்னாசியா.
(c) வங்காள வலய நாடுகள்.

2) ஆசியாவின் கைத்தொழில் அபிவிருத்திக்கு தடையாக விளங்கும் 3 காரணிகளைக் குறிப்பிடுக?
3) ஆசிய்யாவின் ஆடைக் கைத்தொழிலின் சந்தைகளாக விளங்கும் 3 அபிவிருத்தி அடைந்த நாடுகளைக் குறிப்பிடுக?
4) "சார்க்" அமைப்பின் முக்கிய நோக்கங்கள் 3 குறிப்பிடுக?

05. 1) இலங்கையின் நிர்வாக செயற்பாடுகளில் பங்கெடுக்கும் உள்ளூராட்சி தாபனங்கள் 3 குறிப்பிடுக?
2) கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பாரிய கைத்தொழில்கள் 3 குறிப்பிடுக?
3) மகாவலி திட்டத்தின் தேசிய ரீதியிலன அபிவிருத்தித் திட்டங்கள் 3 குறிப்பிடுக?
4) தென் பிரதேச அபிவிருத்தியில் விவசாய செய்கையில் முன்வைக்கப்பட்ட செயல் முறைகள் 3 குறிப்பிடுக?


06. 1) நீலக் கோளின் சிறப்புக்கள் 5 குறிப்பிடுக?
2) ஆசியாவில் அமைந்துள்ள புராதன ஆற்று நாகரிகங்கள் 3 குறிப்பிடுக?
3) ஆசியாவில் மேற்கொள்ளப்படும் 3 பயிர்ச்செய்கை வகைகளைக் குறிப்பிடுக?
4) அயன வலயம் என்றும் பசுமையான மழைக்காட்டு தாவரங்களின் சிறப்பியல்புகளின் சிறப்பியல்புகள் 3 குறிப்பிடுக?

(12 x 5 = 60 புள்ளிகள்)



kalvi.lk

தரம் - 09 (வினா 1) ஆசியா






kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457